**தலைப்பு 280 – செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 280 – செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் 02 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 38,250,000 தொகையினை நிதி ஏற்பாட்டில் மொத்தமாக ரூபா 38,147,320 தொகை அல்லது 100 சதவீத மற்றும் 99.72 சதவீத வீச்சிற்குள் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | E.W. Information System Ltd நிறுவனத்தின் பலவீனமான செயற்திட்டம் உரிய செயற்திட்டத்தினை முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக இத்தலைப்பின் கீழ் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிபிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் வருடாந்த செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்வற்றுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 அந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் ஏசீஏ-07 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களால் முற்பணங்கள் ''பீ'' கணக்கிற்குச் செய்யப்பட்ட செலவு வைத்தல்கள் மற்றும் ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பணங்கள் ''பீ'' கணக்கிற்காக மேற்கொள்ளப்பபட்ட வரவு வைத்தல்களாக தனித்தனியாக காட்டுதல் வேண்டும். எனினும் ஏனைய தலைப்புக்களினால் முற்பணங்கள் ''பீ'' கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல் ரூபா 2,566,717 தொகை மற்றும் ஏனைய தலைப்புக்களுக்கு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வரவுவைத்தல்கள் ரூபா 1,223,786 தொகை கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் தனித்னியாக காட்டப்படாது ஏனைய தலைப்புக்களினால் முற்பணங்கள் ''பீ'' கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்களின் கீழ் மொத்தமாக ரூபா 3,790,119 காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | இணங்கிக் கொள்கிறேன். இடர் கடன் பணத்தை தீர்த்துவைக்கும் போது கடன் பணத்துடன் இடர் கடன் வட்டிப் பணமாகிய ரூபா 192.00 தொகையையும் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மாற்றல் பத்திரத்தின் மூலம் சரிசெய்யும் போது இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டதனால் இந்த வித்தியாசம் உருவாகியிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து இடர் கடன் மற்றும் விழா முற்பணங்களாக மொத்தமாக ரூபா 232,858 அறவிட வேண்டி இருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 02 | 2022 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு தேவையான நிதி ஏற்பாடு இல்லாததனால் 2023 ஆம் ஆண்டில் அக்கடன் | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளை மிகைத்திருந்தும் இந்த நிலுவைக் கடன் மீதி அறவிடப்படவில்லை. | மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாகாண பணிப்பாளரால் 2022-09-20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. இன்றுவரை முற்பணங்கள் ‘‘பீ’’ கடனுக்காக நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை என தொலைபேசியின் மூலம் எங்களால் விசாரித்த போது தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2023-03-23 ஆந் திகதி இது சம்பந்தமாக இரண்டாவது ஞாபகப்படுத்தல் கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டது. | |
| (ஆ) | திணைக்களத்தின் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 7 ஆண்டுகள் காலத்தை மிகைத்த ரூபா 139,921 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட கோவையின் தொடக்க பிரதி தேவைப்படுமாயின் துரிதமாக வழங்கும் அடிப்படையில் உரிய ஊழியரின் தனிப்பட்ட கோவையை மீண்டும் சேவையில் அமர்த்துவதனை கருத்தில் கொள்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைப்பதற்காக 2022-11-08 ஆந் திகதி ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடனை அறவீடு செய்வதற்காக நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3. செயலாற்றல்

### 3.1.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் சுற்றிக்கையின் 3 (அ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அங்கீகரித்த ஆளணியினர், தற்பொழுது இருக்கின்ற ஆளணியினர் மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டம் என்பன அச்செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட, அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணியினர், தாபன கட்டமைப்பு என்பன வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காதிருந்த போதிலும் உரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டிருந்தது எனவும் விசேடமாக 2022 பெறுகைத் திட்டமானது செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது எனவும் குறிப்பிடுகிறேன். 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இந்த ஆவணங்கள், அறிக்கைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அரசாங்க நிதி சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.1.2 கடமைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| எதிர்பார்த்த அபிவிருத்தி பெறுபேறுகள் கிடைப்பதனை சான்றுபடுத்தும் வகையில் அனைத்து அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் வசதிகளை வழங்குவதனைப் போல செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துகின்ற நிறுவனங்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வளங்களை சிறப்பாக பயன்படுத்துவதினூடாக எதிர்பார்த்த அபிவிருத்தி பெறுபேறுகள் கிடைப்பதனை அதிகரித்தல் இத்திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளதுடன் அனைத்து செயற்பாடுகளையும் அதற்கிணங்க நிறைவேற்றுவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 02 செயற்பாடுகள் சம்பந்தமாக எதுவித செயல்முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் இன்னும் 03 செயற்பாடுகளின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளல் 51 சதவீதத்தினைவிட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நாட்டில் உருவாகியிருந்த பிரச்சினையான பொருளாதார சூழ்நிலையில் “சௌபாக்கியத்தின் துாரநோக்கு” இனை அமுல்ப்படுத்துதல் சிக்கலக இருந்தமை,. திணைக்களத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக இணைய வழியினை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டங்களை கண்காணிக்கும் மென்பொருள் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஒரு உள்நாட்டு நிறுவனத்திற்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தும் | திட்டமிட்டவாறு எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உரிய செயற்பாடுகளை நிறைவேற்றவதற்கு அந்தநிறுவனத்திற்கு முடியாதிருந்தமை, 2012 ஆம் ஆண்டு வரையும் திணைக்களத்தில் அமுல்ப்படுத்தப்பட்டு வந்திருந்த செயற்திட்டங்களை கண்காணிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணனி மென்பொருட்களை மீண்டும் செயற்படுத்துவதற்கு உள்ள இயலுமை மற்றும் அதற்காக அபிவிருத்தி தரப்பினர்களின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக தொடர்ச்சியாக முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலங்களின் அடிப்படையில் பல்வேறு வரிசை அமைச்சுக்களின் கீழ் அமுல்ப்படுத்துகின்ற பரந்த மற்றும் பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களின் எண்ணிக்கை 261 ஆக இருந்ததுடன் அவை பரந்த அளவிலான 150 செயற்திட்டங்களினையும் பெரிய அளவவிலான 111 செயற்திட்டங்களையும் கொண்டிருந்தன.<br><br>மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 109 செயற்திட்டங்களுக்கு மத்தியில் 29 செயற்திட்டங்கள் மாத்திரம் முடிவடைந்து செயற்திட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதில் வெற்றியடைந்திருந்ததுடன் செயலாற்றல் சிக்கலின் காரணமாக பெரிய அளவிலான 29 செயற்திட்டங்கள் ஆண்டின் | 2022 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்ட 261 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் சம்பந்தமான மாதாந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் காலாண்டு ரீதியாக அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக 04 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. (முதலாவது காலாண்டு அறிக்கையினை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முடியவில்லை.) இந்த செயல்முன்னேற்ற பரீட்சிப்புக்கள் பின்னர் அவை சம்பந்தமான அவதானிப்புக்களை உரிய அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மேலும் 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் பின்னர் உருவாகிய நிதி | வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தி இணங்கிக் கொண்ட காலப்பகுதி மற்றும் கிரயத்திற்குள் எதிர்பார்த்த அபிவிருத்தி பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியளவில் கைவிடப்பட்டிருந்ததனால் செயற்திட்டங்களின் செயலாற்றல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன. இதற்கிணங்க வளங்களை சிறப்பாக பயன்படுத்துவதனூடாக இணங்கிக்கொண்ட காலப்பகுதி மற்றும் கிரயத்தினுள் எதிர்பார்த்த அபிவிருத்தி பெறுபேறுகளை தோற்றுவிப்பதனை அதிகரிப்பதற்கான குறிக்கோள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ நிலைமையில் பல வெளிநாட்டு கடன் செயற்திட்டங்களுக்கான நிதி அளிப்புக்கள் கைவிடப்பட்டுள்ளதனாலும் மூலப்பொருள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, இறக்குமதியை மட்டுப்படுத்தல் முதலிய காரணங்களால் செயற்திட்டங்களை முன்னெடுத்து செல்ல முடியாதிருந்தது. அந்த நிலைமையால் செயற்திட்டங்களை கண்காணிப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடியாது என்பது தெளிவான ஒரு விடயமாகும். | |
| (இ) | பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய உயர்மட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் தலையீட்டில் தேசிய மதிப்பீட்டு கொள்கையை தயாரிப்பதற்காக ஒரு செயற்பாட்டுக் குழுவினை நியமித்து அதன் வழிகாட்டல் மற்றும் உதவியின் அடிப்படையில் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது ஒரு தேசிய மதிப்பீட்டுக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது என செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த தேசிய மதிப்பீட்டு கொள்கை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தேசிய மதிப்பீட்டுக் கொள்கை 2019 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்தும் அதனை அமுல்ப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களிலும் உரிய உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துதல் மற்றும் பயிற்சியளித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறே தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்திட்ட மதிப்பீட்டின் பல முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் பூரணப்படுத்துதல் வேண்டும். 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதற்காக பொருத்தமான ஒரு சூழல் மற்றும் நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் தேசிய மதிப்பீட்டுக் | எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான தேசிய மதிப்பீட்டுக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்கையினை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. எனினும் தற்பொழுது ‘‘அமைரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையின்’’ நிதி ஒத்துழைப்பின் கீழ் தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் எதிர்பார்ப்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 127.5 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அவற்றில் ரூபா 82.78 மில்லியன் அல்லது 65 சதவீதம் மத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட செலவுக்கட்டுப்பாட்டு சுற்றறிக்கை மற்றும் சனாதிபதி செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவு முகாமைத்துவ சுற்றிக்கைக்கு இணங்க செலவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே பலவீனமான செயலாற்றலின் காரணமாக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களின் கண்காணிப்பு தகவல் முறைமையை தயாரிக்கும் செயற்திட்டத்தினை கைவிட வேண்டி ஏற்பட்டமையும் இந்த நிதி ஏற்பாடு சேமிப்பதற்கு தாக்கமளித்துள்ளது. | திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி பொருளாதார ஸ்திரதன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடமிருந்து முறைப்படியாகப் பொறுப்பேற்க்கப்படாத 02வாகனங்கள் திணைக்களத்தின் | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு | முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு அல்லது மீண்டும் அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்க்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பொருத்தமான உத்தியோகபூர்வ வாகனம் இந்த திணைக்களத்திடம் இல்லாததனால் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. | வேண்டும். |
| (ஆ) | நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சேதிய கொள்கைகள் அமைச்சிற்கு மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த திணைக்களத்திற்குச் சொந்தமான ஓடுவதிலிருந்து அகற்றப்பட்ட 02 மோட்டார் வாகனங்களுக்குரிய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் 2020 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை முறைப்படியாக ஒப்படைக்கும் நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. | இத்திணைக்களத்திற்குச் சொந்தமான ஓடுவதிலிருந்து அகற்றப்பட்ட 02 மோட்டார் வாகனங்களை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு உரிய அனைத்து ஆவணங்களும் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முறைப்படியாக ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் இறுதித் திகதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட Laptop கணனியுடனான ஒரு பேக் பற்றாக்குறையாகக் காணப்பட்டது மற்றும் பொருள் இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட விடயங்களை பௌதீக ரீதியாக இனங்காண்பதற்கு முறையான குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும் பற்றாக்குறை என காட்டப்பட்டிருந்த ரூபா 244,432 பெறுமதியான Laptop கணனியுடனான பேக் மீளாய்வாண்டின் போது | ஏற்றுக்கொள்கிறேன். பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையில் கடமை முடிந்து வீட்டிற்கு எடுத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் அது களவாடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக பொலிசில் முறைப்பாடு செய்து திணைக்களத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. அது சம்பந்தமாக நி.பி 104 இன் கீழ் தொடக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உத்தியோகத்தர்களுக்கு பொலிசின் மூலம் அதனை தேடிக்கண்டு பிடிக்க முடியுமாயின் தெரியப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டிருந்ததனால் உத்தியோகத்தரிடமிருந்து | பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு உரிய பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சொத்துக்களை இனங்காணும் குறியீட்டு இலக்கம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களவாடப்பட்டிருந்தது என நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்ட குறிப்பு (i) இன் மூலம் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு உரிய பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவீடு செய்தல் சில தாமதத்திற்கு உட்பட்டிருந்தது. எனினும் தற்பொழுது உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவீட செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**3.3 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்றுவதின் செயல்முன்னேற்றம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கத்தினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் செயல்முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் சம்பந்தமாக திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட கடமைகளின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (அ) | தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையானது தயாரிப்பு மட்டத்தில் காணப்படுவதனால் திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் 03 வெற்றிக் குறிகாட்டிகள் சம்பந்தமாக எதுவித செயல்முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். அபிவிருத்தி தகவல் முறைமை தயாரிக்கப்பட்டிருக்காததனால் இந்த குறைவான செயல்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் வசதிகள் வழங்கப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கொள்களை | ஏற்றுக்கொள்கிறென். மதிப்பீடு செய்யும் கொள்கையை அமுல்ப்படுத்தும் கட்டமைப்பு | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அடைந்து கொள்ளும் 03 வெற்றிபெறுதல் குறிகாட்டிகளின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல் 49 சதவீதத்தினைவிட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | தயாரிக்கப்படாமையின் காரணமாக இக்குறைபாடு ஏற்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை 102 ஆக இருந்ததுடன் அவற்றில் 30 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களுக்கு மத்தியில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 08 பதவிகளும் மூன்றாம் மட்டத்திலுள்ள 04 அல்லது அங்கீகரித்த அளவில் 100 சதவீதமான பதவிகளும், மற்றும் இரண்டாம் மட்டத்திலுள்ள 13 பதவிகளும் ஆகும். | காணப்படுகின்ற வெற்றிடங்கள் சம்பந்தமாக மென்பொருளினூடாக அரசாங்க நிருவாகம், உள்நாட்டு விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளும் அதிகாரம் இத்திணைக்களத்திற்கு புறம்பான ஒரு செயற்பாடாக இருப்பதுடன் சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணியினரிடமிருந்து வினைத்திறனாக சேவைகளைப் பெற்று திணைக்களத்தின் செயற்பாடுகளை நிர்ணயிக்கப்பட்டவாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவ்வாறு இல்லாத பதவிகள் இருக்குமாயின் அவற்றினை அங்கீகரித்த ஆளணியில் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |